# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 81/மாநகராட்சி/2018

நாள் : 10/09/2018

**திரு க. செல்லப்பா,**
**சென்னை – 600 061** – **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்,**
**திருப்பூர் மாநகராட்சி,**
**திருப்பூர்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, நங்கநல்லூர், A.G.S. காலனி புதுப்பிள்ளையார் கோயில் தெரு, எண்.57–A, பிருந்தாவனம், அடுக்கக மனை 2–வது தளத்தில் வசித்து வரும் திரு க. செல்லப்பா அவர்களின் 12.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 81/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக திருப்பூர் மாநகராட்சி, 4–வது மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் 16.08.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, நங்கநல்லூர், A.G.S. காலனி புதுப்பிள்ளையார் கோயில் தெரு, எண்.57–A, பிருந்தாவனம், அடுக்கக மனை 2–வது தளத்தில் வசித்து வரும் திரு க. செல்லப்பா என்பவர், திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் – 4, வார்டு எண்.59, சரஸ்வதி நகர் மனைப்பிரிவு, கதவு எண்.207/1–D-இல் உள்ள வீடு தனது குடும்பத்தினருக்குப் பாத்தியப்பட்டதென்றும், அவ்வீட்டின் வடபுறம் கீழ்மேலாக செல்லும் 20' x 52' சாலையினை மறித்து கோயில் கட்டுவதற்கான நடவடிக்கையில் அப்பகுதி மக்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்து அதை தடுத்து நிறுத்த ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக திருப்பூர் மாநகராட்சி 4–வது மண்டல உதவி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு 2002–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதென்றும், சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவை அப்போதைய ஆண்டிபாளையம் ஊராட்சிக்கு தான சாசனமாக 04.02.2002 நாளிட்ட ஆவண எண்.480/2002–இல் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று திருப்பூர் மாநகராட்சி, 4–வது மண்டல உதவி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள 20' x 52' அளவுள்ள 1060 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் பொது ஒதுக்கீடாக ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும், அந்த இடத்தில் கட்டடம் எதுவும் கட்டப்படாமல் காலிமனையாகவே உள்ளதென்றும், மாநகராட்சிக்குச் சொந்தமான அக்காலிமனையினை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்து அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3. திருப்பூர் மாநகராட்சி, 4–வது மண்டல உதவி ஆணையாளரிடம் 16.08.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. பொதுப்பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட மனையினை, வேறு பயன்பாட்டிற்குப் பயன்டுத்தபடவிருந்த நிலையினை இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிக்கை வரப்பெற்றவுடன் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதென்றும், இதனால் சுமார் 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம் சுற்றிலும் இரும்பு வேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளதென்று விசாரணையின்போது உதவி ஆணையர் தெரிவித்தார்.

4. திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண்.59, சின்னாண்டி பாளையம், சரஸ்வதி நகரில் பொதுப்பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட 1060 சதுர அடி பரப்பளவிலான நிலம் தற்பொழுது மாநகராட்சியால் சுற்றுவேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. இந்நிலம் குறித்து முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்தபின்பே மாநகராட்சியும் அந்நிலத்தை பாதுகாத்திட சுற்றுவேலி அமைத்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எனவே, இதுபோன்ற ஆக்கிரமிப்பு நேர்வுகளில் மாநகராட்சி தன்னிச்சையாக மாநகராட்சி நிலங்களை பாதுகாத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 10–ஆம் நாள், என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

14/9/18

14/9/18

பெறுநர்

1. திரு க. செல்லப்பா,
எண். C-57-A, பிருந்தாவனம் அடுக்கக மனை,
2–வது தளம், புதுப்பிள்ளையார் கோயில் தெரு,
A.G.S. காலனி, நங்க நல்லூர்,
சென்னை – 600 061.

2. உதவி ஆணையாளர்,
மண்டலம் – 4,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

3. மாநகராட்சி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி